க. பொ.த உயர் தரம்

# பொருளியல் I

Channel NIE

கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சைக்கான முன்னோடி பரீட்சை-2022

பொருளியல் -1 நேரம்:- இரண்டு மணித்தியாலம்

அறிவுறுத்தல்


பரீட்சை சுட்டெண்:....................................

- எல்லாவினாக்களுக்கும் விடைத் தருக.
- பரீட்சை சுட்டெண்ணை மேலுள்ள கூட்டினுள் தெளிவாக குறிப்பிடுக.
- வினா இலக்கம் 1 இலிருந்து 50 வரையான வினாக்களுக்கு சரியான விடையை தெரிவு செய்து அதனை விடைத்தாளில் குறிப்பிடுக.

1. பொருளியலில் நுன்பாகம்,பேரினம் என்ற இரு துறைகள் காணப்படுகின்றன.பின்வரும் கூற்றுகளில் இருந்து பேரின பொருளாதார கூற்றை தெரிவு செய்க.
   1. எல்லை விளைவு உயர்வடையும் போது எல்லை செலவு குறைவடையும்
   2. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது பாதீட்டின் முழு மொத்த பற்றாக்குறை உயர்வடைந்துள்ளது
   3. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இவ்வருடத்தில் அரிசியின் விலை உயர்வடைந்துள்ளது
   4. உற்பத்தி நிறுவனமொன்றின் வளங்களின் வினைத்திறனை உயர்தகுவதன் மூலம் செலவு குறைவடையும்
   5. இலங்கையின் கிராமிய பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு போக்குவரத்து கட்டமைப்பு விருத்தியடையச் செய்தல் வேண்டும்.

2. ஏதாவதொரு தெரிவின் போது அமையச் செலவு பூச்சியமாக காணப்படக்கூடிய சந்தர்ப்பமாக இருப்பது
   1. அருமையான வளங்களை பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்துதல்
   2. உற்பத்தி வளங்களை நிறைவான மட்டத்தில் பயன்படுத்துதல்
   3. பொருளாதாரத்தில் அருமையான வளங்களை சமூக விருப்பத்திற்கமைய ஒதுக்கீடு செய்தல்
   4. பொருளாதாரத்தில் இன்னும் பயன்படுத்தப்படாத நிலையிலுள்ள வளங்கள் காணப்படுதல்.
   5. பொருளாதாரத்தில் சகலவளங்களிலிருந்தும் அதிகளவான விளைதிறனைப் பெற்றுக்கொள்ளல்

3. பின்வரும் உற்பத்திசாத்திய வளையியானது A புள்ளியிலிருந்து B புள்ளியை நோக்கி செல்வதைக் காட்டுகின்றது. இதனால் கருதப்படுவது




   1. உற்பத்தி இயலளவு உயர்வடைதல்
   2. சாத்திய வெளியீடு விரிவடைதல்

3. அமையச் செலவு உயர்வடைதல்
4. வளப்பாவனை உயர்வடைதல்
5. பொருளாதார வளர்ச்சியை நோக்கிச் செல்லல்

4. நிகழ்காலத்தில் பொருளாதார அமைப்புகளின் நவீன திருப்புமுனையாக சமூக சந்தை காணப்படுகின்றது இத்தகைய சமூகசந்தை பொருளாதாரத்தில் காணப்படக்கூடிய முக்கிய பண்பாக இருப்பது.
   1. அடிப்படைபொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்மானங்களை மேற்கொள்ளும் செயற்பாட்டிற்கு சமய நோக்கினை அடிப்படையாகக் கொள்ளுதல்.
   2. பொதுச் சொத்துக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தி, நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது அரசாங்கம் பாதுகாப்பினை வழங்குதல்.
   3. பொருளாதாரத்தில் அரச துறையினரால் மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார செயற்பாடுகளை தனியார் துறையினர் கண்காணிப்புச் செய்தல்
   4. அரசியல் அதிகாரிகளால் வழங்கப்படும் வழிகாட்டலின் அடிப்படையில் திட்டங்களை வகுத்தலும் அவற்றினை செயற்படுத்தலும்
   5. தனியார் சொத்துரிமை ,சுதந்திரமான தெரிவு மற்றும் போட்டி ஆகிய அடிப்படை கொள்கைகள்மீது அமைந்த சமூக நியாயத்துவத்தை உறுதிப்படுத்துதல்.

5. பின்வரும் கூற்றுக்களில் கேள்வி விதியினை விளக்கும் மிகப்பொருத்தமான கூற்றாக இருப்பது.
   1. நுகர்வோனின் மெய்வருமானம் மாற்றமடைவதனால் அரிசியின் கேள்வித்தொகையில் மாற்றம் ஏற்படுதல்
   2. பெயரளவு வருமானம் மாற்றமடைவதற்கேற்ப அரிசியின் கேள்வித்தொகையில் மாற்றம் ஏற்படுதல்
   3. உர தட்டுப்பாட்டின் காரணமாக எதிர்காலத்தில் அரிசியின் விலை உயர்வடையலாம் என்ற எதிர்பார்க்கை காணப்படுதல்
   4. அரிசி உற்பத்தியாளரின் எண்ணிக்கையினை விட அரிசி கொள்வனவாளர்களின் எண்ணிக்கையில் விரைவான வீழ்ச்சி ஏற்படுதல்.
   5. பதிலீட்டுப் பண்டத்தின் விலை உயர்வடைவதினால் அரிசிக்கான கேள்வியில் உயர்வு ஏற்படுதல்.

6. குறித்தவொரு பண்டத்திற்கான சந்தை கேள்வி சமன்பாடானது $Qd=70-2p$ யிலிருந்து $Qd=50-2p$ என மாற்றமடைந்தது எனக்கருதுக. இதற்கான காரணமாக இருப்பது
   1. குறித்த பண்டத்தின் விலை உயர்வடைதல்
   2. நுகர்வோன் வருமானம் உயர்வடைதல்
   3. நுகர்வோன் சுவை உயர்வடைதல்
   4. பதிலீட்டுப் பண்டத்தின் விலை உயர்வடைதல்
   5. நிரப்புப் பண்டத்தின் விலை உயர்வடைதல்

7. குறித்த பண்டத்திற்கான வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சியானது 1.2 ஆகும். அப்பண்டமானது
   1. அத்தியவசியப் பண்டமாகும்
   2. ஆடம்பரப் பண்டமாகும்
   3. இழிவுப் பண்டமாகும்
   4. பதிலீட்டுப் பண்டமாகும்
   5. கிப(f)ன் பண்டமாகும்

8. நெகிழ்ச்சியற்ற நிரம்பலைக்கொண்ட பண்டமொன்று தொடர்பான சரியான கூற்றாவது
   1. நிரம்பல் கோடு தொகையச்சினூடாக செல்லும் பண்டத்தின் விலை அதிகரிக்க நெகிழ்ச்சி குணகத்தின் பெறுமதி குறைவடையும்.
   2. நிரம்பல் கோடு விலையச்சினூடாக செல்லும் பண்டத்தின் விலை அதிகரிக்க நெகிழ்ச்சி குணகத்தின் பெறுமதி குறைவடையும்.
   3. நிரம்பல் கோடு தொகையச்சினூடாக செல்லும் பண்டத்தின் விலை அதிகரிக்க நெகிழ்ச்சி குணகத்தின் பெறுமதி அதிகரிக்கும்
   4. நிரம்பல் கோடு விலையச்சினூடாக செல்லும் பண்டத்தின் விலை அதிகரிக்க நெகிழ்ச்சி குணகத்தின் பெறுமதி அதிகரிக்கும்
   5. நிரம்பல் கோடு மூலப் புள்ளியினூடாக செல்லும் பண்டத்தின் விலை அதிகரிக்கும் போது நெகிழ்ச்சி குணகத்தின் பெறுமதி ஒன்றுக்கு சமனாகும்.

9. போட்டி சந்தையொன்றில் சாதாரண பணடமொன்றிற்கான கேள்வி குறைந்து நிரம்பல் கூடினால்
   1. சமநிலை விலை,தொகை என்ற இரண்டும் கூடும்
   2. சமநிலை விலை குறையும், தொகைக் கூடும்
   3. சமநிலை விலை கூடும்,தொகை கூடும் அல்லது குறையும்
   4. சமநிலை விலை கூடும் தொகை குறையும்

5. சமநிலை விலை குறையும்,சமமநிலைத் தொகைக்கூடும் அல்லது குறையும் அல்லது மாற்றமின்றி இருக்கும்

10. போட்டி சந்தையொன்றில் விநியோகிக்கப்படுகின்ற பண்டமொன்றிற்கான சந்தையின் கேள்வி நிரம்பல் சமன்பாடுகள் வருமாறு Qd=150-5p Qs= -10+3p சந்தையில் சமநிலை ஏற்படும் போது அப்பண்டத்திற்கான கேள்வி நெகிழ்ச்சியும், நிரம்பல் நெகிழ்ச்சியும்

1. கேள்வி நெகிழ்ச்சி – 1.4 , நிரம்பல் நெகிழ்ச்சி 1 ஆகும்
2. கேள்வி நெகிழ்ச்சி – 1.8 , நிரம்பல் நெகிழ்ச்சி 1.2 ஆகும்
3. கேள்வி நெகிழ்ச்சி – 2.0 , நிரம்பல் நெகிழ்ச்சி 1.2 ஆகும்
4. கேள்வி நெகிழ்ச்சி – 2.0 , நிரம்பல் நெகிழ்ச்சி 1.5 ஆகும்
5. கேள்வி நெகிழ்ச்சி – 5.0 , நிரம்பல் நெகிழ்ச்சி 2 ஆகும்


11. இழிவுப் பண்டம் கிப(f)ன் பண்டத்துடன் தொடர்புடைய சரியான கூற்றை தெரிவு செய்க

1. இருபண்டங்களினதும் விலைக்கும் கேள்வித்தொகைக்குமிடையே எதிரான தொடர்பு காணப்படும்
2. இருபண்டங்களினதும் விலைவிளைவு + (நேர்) கணியாகும்
3. இழிவு பண்டத்தின் வருமான விளைவு + (நேர்) கணியமாகும். கிப(f)ன் பண்டத்தின் வருமான விளைவு - (எதிர்) கணியாகும்
4. இழிவு பண்டத்தின் எதிர்கணிய பதிலீட்டு விளைவானது கிப(f)ன் பண்டத்தின் எதிர்கணிய பதிலீட்டு விளைவினை விட உயர்வாகும்
5. எல்லா இழிவுப் பண்டங்களும் கிப(f)ன் பண்டமாக இருப்பதுடன் எல்லா கிப(f)ன் பண்டங்களும் இழிவுப்பண்டமாக இருக்காது

12. குறித்தவொரு பண்டத்திற்கான நுகர்வோன் மிகையானது ரூபா 4500 ஆக காணப்படுவதுடன் அரசாங்கமானது உற்பத்தியாளரை ஊக்கப்படுத்தும் நோக்கில் ரூபா 3500 ஐ மானிய செலவாக மேற்கொண்டது. அந்நிலையில் சந்தையின் வெளியீடு 350ற்கு நுகர்வோன் மிகையானது ரூபா 6125 ஆக காணப்படுவதுடன் நுகர்வோன் செலவு ரூபா 8750 ஆக காணப்பட்டது. மேலுள்ள தகவலின் அடிப்படையில் அரசாங்கம் வழங்கிய ஒரு அலகிற்கான மானியமும், நுகர்வோன் பெற்றுக்கொண்ட மொத்த மானியத்தின் அளவும் யாது?


1. ரூபா 10 உம் , ரூபா 4250 ஆகும்
2. ரூபா 10 உம் , ரூபா 1625 ஆகும்
3. ரூபா 05 உம் , ரூபா 4250 ஆகும்
4. ரூபா 10 உம் , ரூபா 2625 ஆகும்
5. ரூபா 20 உம் , ரூபா 1625 ஆகும்.

13. பின்வரும் உற்பத்திசாத்திய வளையீயானது யு புள்ளியிலிருந்து டீ புள்ளியை ரோக்கி செல்வதைக் காட்டுகின்றது. இதனால் கருதப்படுவ




| | மிகைக்கேள்வித் தொகை | குறையுற்பத்தி | சமூக நலன் இழப்பு |
|---|---|---|---|
| 1. | 200 | 200 | 1000 ரூபா |
| 2. | 300 | 200 | 500 ரூபா |
| 3. | 200 | 300 | 500 ரூபா |
| 4. | 200 | 100 | 1000 ரூபா |
| 5. | 400 | 200 | 2000 ரூபா |

14. உத்தரவாத விலைமுறைமையின் கீழ் அரசாங்கத்தினால் மிகை நிரம்பல் கொள்வனவு செய்யப்பட்டால்





| | மீளமுடியாத இழப்பு (DWL) | சமூக நலனில் நட்டம் | அரச செலவு |
|---|---|---|---|
| 1. | C H | C H | B C D E H I |
| 2. | E | E | B I J |
| 3. | E | C H G F E | C D E F G H |
| 4. | C H G F E | E | C D E F G H |
| 5. | E | J G F E | C D E F G H |

15. சந்தையில் மிளகாய் உற்பத்திக்கு மிகை நிரம்பல் தோன்றும் நிலையில் மிளகாய் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்காக, அரசாங்கத்தினால் பின்பற்றக்கூடிய மிகப் பொருத்தமான விலை உறுதிப்பாட்டு செயற்பாடாக இருப்பது

1. பாதுகாப்புச் செய்த இருப்புக்களை விடுவித்தல்
2. உற்பத்தியின் மீதான கோட்டா முறையை அதிகரித்தல்
3. காணிகளை விவசாயத்தில் ஈடுபடுத்தாமல் இருப்பதன் பொருட்டு விவசாயிகளுக்கு வழங்கிய உதவித்தொகையை நீக்குதல்
4. பாதுகாப்பான இருப்புத்திரட்சியை மேற்கொள்ளல்
5. மிளகாய் உற்பத்தியாளர்களுக்கு உயர்வான விலையை வழங்குவதற்காக நுகர்வோன் வரியை உயர்த்துதல்.

16. பின்வரும் வரைபின்படி குறுங்கால உற்பத்தியின் போது A யிலிருந்து B நோக்கிச் செல்லும் போது




1. விலையானது நிலையாக இருந்தாலும் மொத்த நிலையான செலவானது படிப்படியாக அதிகரிக்கும்.
2. மொத்த நிலையான செலவானது ரூபா 10000 இலிருந்து ரூபா 20000 ஆக அதிகரித்துள்ளது
3. உற்பத்தி அதிகரிக்கும் போது மொத்த நிலையான செலவு குறைவடையும்
4. சராசரி நிலையான செலவானது 0.25 இலிருந்து 0.125 ஆக குறையும்
5. சராசரி நிலையான செலவானது 4 இலிருந்து 8 ஆக உயர்வடையும்

17. குறுங்காலத்தில் நிறைபோட்டி நிறுவனம் ஒன்றின் உத்தம உற்பத்தி ஆனது 80 அலகுகளாக காணப்படுவதுடன் இந்நிலையில் நிறுவனத்தின் சாராசரி வருமானமானது ரூபா 30 ஆகும். அலகொன்றிற்கான மாறும் செலவு ரூபா 22 ஆகும். இந்நிலையில் ஒரு அலகு வெளியீட்டுக்கான மொத்தச் செலவு ரூ 60 ஆகும் இதன்படி நிறுவனம் உழைக்கும் இலாபம் அல்லது நட்டத்தையும் மொத்த நிலையான செலவையும் சரியாக காட்டும் விடையாவது.

| | இலாபம் அல்லது நட்டம் | மொத்த நிலையான செலவு |
|---|---|---|
| 1. | இலாபம் ரூபா 2400 | ரூபா 3200 |
| 2. | நட்டம் ரூபா 2400 | ரூபா 3040 |

| | | |
|---|---|---|
| 3. | நட்டம் ரூபா 1600 | ரூபா 1600 |
| 4. | இலாபம் ரூபா 1600 | ரூபா 3200 |
| 5. | இலாபம் ரூபா 3200 | ரூபா 3040 |

18. நெகிழ்வற்ற நிரம்பலைக் கொண்ட உற்பத்திக் காரணி ஒன்றில் காணப்படக்கூடிய பண்பாக இருப்பது.

1. முழுமையான வருமானமும் மாற்றல் வருமானமுமாக இருப்பது.
2. முழுமையான வருமானமும் பொருளியல் வாடகையாக காணப்படும்
3. பொருளியல் வாடகையை விட மாற்றல் வரமானம் உயர்வாகும்
4. மாற்றல் வருமானத்தை விட பொருளியல் வாடகை உயர்வாகும்
5. பொருளியல் வாடகையும் மாற்றல் வருமானமும் சமனாக காணப்படும்.

19. பின்வரும் தகவல்களின் அடிப்படையில் தேசிய கணக்கீட்டை தயாரிக்கும் போது வருமான முறையின் கீழ் மொத்தக் கூட்டப்பட்ட பெறுமதியின் அளவாக இருப்பது.(எல்லா தொகைகளும் மில்லியன் ரூபாவில்)

வெளியீட்டின் பெறுமதி - 8000

நிலையான மூலதன நுகர்வு - 200

முலப்பொருள் செலவு - 700

ஊழிய சம்பளம் - 600

வாடகை - 700

வட்டி - 300

இலாபம் - 800

1. 7800 2. 2600 3. 2400 4. 5600 5. 2200

20. தேசிய கணக்கீட்டை தயாரிக்கும் போது காரணி விலையிலான மொத்த கூட்டப்பட்ட பெறுமதியை,சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியாக மாற்றுவதற்கான சரியான சமன்பாடாக காணப்படுவது.

1. காரணிச் செலவு + உற்பத்தி மீதான உதவுத்தொகை + உற்பத்தி செயற்பாட்டின் மீதான வரி+ பொருட்கள்,சேவைகள் மீதான தேறிய வரி
2. காரணிச் செலவு - உற்பத்தி மீதான உதவுத்தொகை + உற்பத்தி செயற்பாட்டின் மீதான வரி - பொருட்கள்,சேவைகள் மீதான தேறிய வரி
3. காரணிச் செலவு - உற்பத்தி செயற்பாட்டின் மீதான தேறிய வரி - பொருட்கள், மீதான தேறிய வரி
4. காரணிச் செலவு + உற்பத்தி செயற்பாட்டின் மீதான தேறிய வரி - பொருள் மீதான வரி - பொருட்கள், மீதான உதவுத் தொகை + நுகர்வோன் மீதான தேறிய வரியும் வர்த்தக எல்லையும்.
5. காரணிச் செலவு – பொருள் மீதான தேறிய வரி - நுகர்வோன் மீதான தேறிய வரியும் வர்த்தக எல்லையும்.

21. பின்வரும் தேசிய கணக்கீட்டு தகவல்களின் அடிப்படையில் சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதி யாது.? (எல்லா தொகைகளும் மில்லியன் ரூபாவில்)

தேறிய செயற்பாட்டு மிகை 1000

தொழில் வருமானம் 800

பொருள் சேவை மீதான தேறிய வரி 200

உற்பத்தி மீதான ஏனைய வரி 600

உற்பத்தி மீதான ஏனைய உதவுத் தொகை 250

நிலையான மூலதன நுகர்வு 300

கம்பனி இலாபம் 400

1. 2050 2. 2300 3. 2150 4. 2650 5. 2100

22. பொருளாதாரமொன்றின் தேசிய கணக்கீட்டை தயாரிக்கும் போது உள்ளடக்கப்படாத பயனுள்ள பொருளாதார செயற்பாடாக இருப்பது.

1. நோயாளி ஒருவரை தாதி ஒருவரால் பராமரிக்கப்படுதல்.
2. கம்பனி துறையினரால் அரசாங்கத்திற்கு செலுத்தும் கம்பனி வரி
3. வீட்டுத் தலைவி ஒருவரால் மேற்கொள்ளப்படும் வீட்டு அலங்காரம்
4. காட்டில் தேன் சேகரித்தல்
5. தனது வீட்டிலேயே வழங்கப்படுகின்ற விடுதி வசதி

23. பேரினப் பொருளாதாரமொன்றின் நுகர்வுச் சார்பு C = 200 + 0.8 yd ஆக இருப்பதுடன் முதலீடு ரூபா 300 மில்லியன் ஆகவும் அரச கொள்வனவு ரூபா 100 மில்லியன் ஆகவும் காணப்பட்டது. இப்பொருளாதாரத்தில் வரி அறவீடு ரூபா 50 மில்லியன் ஆகும். இத்தகவலின் அடிப்படையில் இப்பொருளாதாரத்தின் வெளிப்பாய்ச்சலின் பெறுமதி

1. 450 2. 400 3. 360 4. 460 5. 280

24. மூடிய பொருளாதாரமொன்றில் எல்லை சேமிப்பு நட்டமானது 0.2 ஆகவும் தன்னிச்சையான நுகர்வு ரூபா 100 மில்லியனாகவும் முதலீடு ரூபா 200 மில்லியனாகவும் அரச நுகர்வு செலவு ரூபா 300 மில்லியனாகவும் இருந்தது. இப்பொருளாதாரத்தின்

| | பேரின பொருளாதார சமநிலை | தன்னிச்சையான செலவு பெருக்கி | சமநிலையின் போதான சேமிப்பு |
|---|---|---|---|
| 1. | 4000 | 5 | 800 |
| 2. | 3500 | 4 | 2900 |
| 3. | 4500 | 4 | 1900 |
| 4. | 3000 | 5 | 500 |
| 5. | 5000 | 5 | 800 |

25. குறித்தவொரு பொருளாதாரத்தில் தன்னிச்சையான நுகர்வு 200 மில்லியன் ரூபாவாகும். இப்பொருளாதாரத்தின் எல்லை சேமிப்பு நாட்டமானது 0.4 ஆக காணப்படும் நிலையில் சேமிப்பானது பூச்சியமாகவும் நுகர்வு 800 ஆகவும் அமையக்கூடிய வருமான மட்டமாவது

| | சேமிப்பானது பூச்சியமாக காணப்படும் போதுள்ள வருமான மட்டம் | நுகர்வானது 800 ஆக காணப்படும் போதுள்ள வருமான மட்டம் |
|---|---|---|
| 1. | 800 மில்லியன் ரூபா | 500 மில்லியன் ரூபா |
| 2. | 500 மில்லியன் ரூபா | 1000 மில்லியன் ரூபா |
| 3. | 500 மில்லியன் ரூபா | 800 மில்லியன் ரூபா |
| 4. | 1000 மில்லியன் ரூபா | 600 மில்லியன் ரூபா |
| 5. | 200 மில்லியன் ரூபா | 800 மில்லியன் ரூபா |

26. கிட்டிய பணம் பற்றிய மிகவும் சரியான கூற்றாவது.

1. பரிமாற்று ஊடகமொன்றாக செயற்படுகின்ற குறைந்த திரவத்தன்மைக் கொண்ட ஊடகமாகும்
2. பெறுமான திரட்டாக செயற்படுகின்ற பரிமாற்று ஊடகமாக தொழிறபடாத ஊடகமாகும்.
3. பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடகமாக தொழிற்படுகின்ற உயர் திரவத்தன்மைக் கொண்ட ஊடகமாகும்
4. பெறுமான திரட்டாக செயற்படாத பரிமாற்றூடகமாக செயற்படும் ஊடகமாகும்
5. பெறுமான அலகாக தொழிற்படாததும் பரிமாற்றூடகமாக தொழிற்படுகின்ற ஊடகமாகும்.

27. பொருளாதாரமொன்றின் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி 2000 மில்லியன் ரூபா ஆகவும் விலைமட்டம் 20 ஆகவும் உள்ளது. பணத்தின் சுற்றோட்ட வேகம் 50 ஆகவும் இருப்பின் பண நிரம்பலின் பெறுமதியாவது

1. 60 2. 100 3. 40 4. 80 5. 120

28. வீக்க நிலைமை பொருளாதாரம் ஒன்றிற்கு மிகவும் சக்தி வாய்ந்த சவாலாகும். கேள்வியால் தூண்டப்பட்டதும் செலவினால் தள்ளப்பட்டுமான பணவீக்கத்திற்கு செல்வாக்கு செலுத்தும் காரணங்களை உள்ளடக்கிய சரியான விடையாவது.

| | கேயின்சிய தத்துவப்படி கேள்வி தூண்டல் வீக்கம் | செலவினால் தள்ளப்பட்ட வீக்கம் |
|---|---|---|
| 1. | பொருளாதார பின்னடைவு | கனிய எண்ணெயின் விலையில் அதிகரிப்பு |
| 2. | நுகர்வு செலவுகள் உயர்வடைதல் | உற்பத்தி அதிகரித்தல் |
| 3. | மொத்தக்கேள்வி அதிகரிப்பு | பணநிரம்பல் அதிகரித்தல் |
| 4. | பணநிரம்பல் அதிகரிப்பு | ஊழியர் சம்பளம் அதிகரித்தல் |
| 5. | மொத்தக்கேள்வி அதிகரிப்பு | ஊழியர் சம்பளம் அதிகரித்தல் |

29. குறித்த பொருளாதாரமொன்றின் வர்த்தக வங்கி அமைப்பொன்றின் ஒன்றினைக்கப்பட்ட ஐந்தொகை கீழே காட்டப்படுகின்றது. இப்பொருளாதாரத்தில் பொதுமக்களிடமுள்ள சட்டமுறைப் பணத்தின் அளவு 1500 ஆகும். வங்கியமைப்பில் உள்ள மிகையொதுக்குகள் பூச்சியமாகும்.

| பொறுப்பு | (மில்லியன் ரூபா) | சொத்து | (மில்லியன் ரூபா) |
|---|---|---|---|
| வைப்புகள் | 1000 | ஒதுக்கு | 200 |
| | | கடன் | 800 |
| மொத்த பொறுப்பு | 1000 | மொத்த சொத்து | 1000 |

மத்திய வங்கி சட்டமுறையான ஓதுக்கு வீதத்தை 25% வரை அதிகரிக்குமாயின்

| | புதிய மொத்த வைப்புத் தொகை(மில்லியன் ரூபா) | புதிய மொத்தக் கடன் தொகை (மில்லியன் ரூபா) | புதிய பண நிரம்பல் (மில்லியன் ரூபா) |
|---|---|---|---|
| 1. | 1800 | 1200 | 700 |
| 2. | 800 | 600 | 1700 |
| 3. | 1000 | 600 | 2000 |
| 4. | 2000 | 800 | 2800 |
| 5. | 800 | 1000 | 2300 |

30. நிதிக் கொள்கை தொடர்பான சரியான வரைவிலக்கணம் மற்றும் அதற்கான சரியான கருவியாவது

| | வரைவிலக்கணம் | கருவி |
|---|---|---|
| 1. | நிதி அமைப்பில் உறுதித் தன்மையை ஏற்படுத்துதல் | பணநிரம்பல் |
| 2. | நிதி நிறுவனங்களை கட்டுப்படுத்தவும் மேற்பார்வையும் | வங்கி வட்டி வீதம் |
| 3. | இலாபத்தன்மையையும்,திரவத்தன்மையையும்பாதுகாத்தல் | திறந்த சந்தை நடவடிக்கை |
| 4. | விலை உறுதியைப் பேணுவதற்காக பணநிரம்பலையும் வட்டி வீதத்தையும் நெறிப்படுத்துதல் | கொள்கை வட்டி வீதம் |
| 5. | பேரின பொருளாதார நோக்கங்களுக்காக வரிகள்,அரசாங்க செலவு மற்றும் கடன் பெறுதல் என்பவற்றை நெறிப்படுத்துதல் | அரச வரிகள் |

31. நுகர்வில் போட்டித்தன்மையற்ற, நுகர்விலிருந்து விலக்க முடியாத பண்டமாக கருதக்கூடியது.


1. இலத்திரணியல் கருவிகள்
2. கலங்கரை விளக்கம்
3. மீன் வளங்கள்

4. அதிவேகப் பாதை
5. கல்வி

32. வரிக்கு காரணமாக இருப்பவை வரி அடிப்படையாகும். அதே வேளை வரி அடிப்படை மாற்றமடையும் போது அறவிடப்படும் வரியின் அளவில் மாற்றத்திற்கேற்ப எல்லை வரி வீதமும் தீர்மானிக்கப்படுகின்றது. இதன்படி விருத்தி முறை வரிவிகிதத்திற்கு பொருத்தமான சரியான கூற்றாவது.

1. வரி அடிப்படை அதிகரிக்கும் போது எல்லை வரி வீதமும் சராசரி வரி வீதமும் சமமாக அமைதல்.
2. வரி அடிப்படை அதிகரிக்கும் போது எல்லை வரி வீதம் நிலையான இருக்க வரி வீதம் குறைவான மட்டத்திலிருத்தல்
3. வரி அடிப்படை அதிகரிக்கும் போது எல்லை வரி வீதம் சராசரி வரி வீதம் அதிகரிக்கும்.
4. வரி அடிப்படை அதிகரிக்கும் போது எல்லை வரி வீதமும் சராசரி வரி வீதமும் மாற்றமடையாமல் இருக்கும்
5. வரி அடிப்படை அதிகரிக்கும் போது எல்லை வரி வீதத்தைவிட சராசரி வரி வீதம் உயர்வான பெறுமதியை கொண்டிருத்தல்

33. கீழுள்ள வரிப்படத்தில் காட்டப்படுவது தனியார் மற்றும் சமூக நலன்களும்,தனியார் செலவும் ஆகும்.அதற்கேற்ப சரியான விடையாவது.




| | **வெளிவரி விளைவு** | **சந்தையின் உற்பத்தி மட்டம்** | **சந்தையின் உற்பத்தி மட்டம்** |
|---|---|---|---|
| 1. | நுகர்வு நேர்க்கணியம் | குறை உற்பத்தி | அதிகரிக்கப்பட வேண்டும் |
| 2. | நுகர்வு எதிர்க்கணியம் | மிகை உற்பத்தி | குறைக்கப்பட வேண்டும் |
| 3. | உற்பத்தி நேர்க்கணியம் | உத்தம உற்பத்தி | நிலையாக காணப்பட வேண்டும் |
| 4. | உற்பத்தி எதிர்க்கணியம் | செயற்றிறனற்ற உற்பத்தி | குறைக்கப்பட வேண்டும் |
| 5. | நுகர்வு நேர்க்கணியம் | மிகை உற்பத்தி | அதிகரிக்கப்பட வேண்டும் |

34. 2020 ஆம் வருடத்திற்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாதக அரசாங்க செலவிற்குரிய சரியான பெறுமதியாவது

1. 18.2    2. 19.4    3. 22.5    4. 17.3    5. 20.3

35. குறித்த பொருளாதாரமொன்றின் அரச நிதி பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன. அதன்படி சரியான விடையினை தெரிவு செய்க.

- அரச வருமானம் 4000
- அரச மொத்த செலவு 6200
- கொடைகளும் தனியார் வரவுகளும் 500
- நடைமுறைச் செலவு 2700
- நடைமுறை மாற்றல் 500
- உள்நாட்டு வங்கியல்லா கடன் 200
- வெளிநாட்டுக் கடன் 900
- பண்டநட்கள் சேவைகளுக்கான செலவு 1000

| | **மொத்த வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை** | **நடைமுறைக் கணக்கு மீதி** | **வட்டிக் கொடுப்பனவு** | **விரிவாக்கத் தாக்கம்** |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | -1200 | 1800 | 2000 | 900 |
| 2. | -1700 | 1300 | 1200 | 600 |
| 3. | -2700 | 1500 | 1000 | 600 |
| 4. | -1800 | 800 | 1300 | 900 |
| 5. | -1700 | 1000 | 800 | 600 |

36. இலங்கை ஐக்கிய அமெரிக்காவுடன் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட்டு ஆடைகள் மற்றும் கோதுமை இரண்டு நாடுகளுக்கிடையே பரிமாற்றிக் கொள்கிறது.எனின் வர்த்தகத்தினால் இரண்டு நாடுகளுக்கும் ஒப்பீட்டு நன்மை ஏற்படுவதில் செல்வாக்கு செலுத்தும் காரணியொன்றாக அமைவது.

1. பயன்படுத்தும் தொழில் நுட்பத்தில் வேறுபாடு காணப்படல்
2. இரண்டு பண்டங்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது என்பது
3. இரண்டு நாடுகளினதும் சுவை சமனாக இருத்தல்.
4. குறைந்த செலவில் பொருள் உற்பத்தி செய்யப்படுகிறது என்பது.
5. உயர்வான விலையை அறவிட்டாயினும் பண்டத்தை வேறுபடுத்தியிருத்தல்.

37. இலங்கை மற்றும் இந்தியாவிற்கிடையில் சர்வதேச வர்த்தகத்தின் போது உழைப்பாளன் ஒருவனால் செய்யப்பட்ட உற்பத்தி தரவுகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பண்டம் | இலங்கை | இந்தியா |
|---|---|---|
| தேயிலை | 4 | 6 |
| அரிசி | 3 | 4 |

இரண்டு நாடுகளுக்கிடையிலும் நன்மைபயக்கும் வர்த்தகமொன்று நடைபெற வேண்டுமெனின் ஓரலகு தேயிலைக்கு பரிமாற்றப்பட வேண்டிய மிகவும் நன்மைபயக்கும் விகிதம் யாது?

1. தேயிலை 1 = அரிசி 0.50
2. தேயிலை 1 = அரிசி 1.40
3. தேயிலை 1 = அரிசி 0.66
4. தேயிலை 1 = அரிசி 0.68
5. தேயிலை 1 = அரிசி 0.70

38. குறித்த பொருளாதாரம் ஒன்றின் கடந்த கால பொருளாதார தகவல்கள் சில கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன இதனடிப்படையில் உம்மால் எந்த முடிவிற்கு வரமுடியும்.

| வருடம் | நாணய மாற்று விகிதம் | ஏற்றுமதி அளவுச் சுட்டெண் | இறக்குமதி விலைச் சுட்டெண் | வர்த்தக மீதி |
|---|---|---|---|---|
| 1 வருடம் | 120 | 100 | 120 | +50 |
| 2 வருடம் | 120 | 80 | 140 | +150 |

1. இறக்குமதி விலைச் சுட்டெண் அதிகரிப்பு காரணமாக வர்த்தக மீதி மிகையாக உள்ளது
2. நாணய மாற்று வீதம் நிலையாக இருப்பதனால் வர்த்தக மீதி சாதகமாக உள்ளது.
3. வர்த்தக மாற்று வீதமானது பாதகமாக இருந்தாலும் வர்த்தக மீதி சாதகமாக உள்ளது.
4. வர்த்தகமாற்று விகிதத்தை விட நாணய மாற்று விகிதம் தேய்வடைந்துள்ளமையால் வர்த்தக மீதி சாதகமாக அமைந்துள்ளது
5. இறக்குமதி அளவுச் சுட்டெண் மற்றும் இறக்குமதி விலைச் சுட்டெண் அதிகரிப்புக் காரணமாக வர்த்தக மீதி சாதகமாக உள்ளது

39. இரட்டை பதிவுத் தத்துவத்தின் படி 100 மில்லியன் ரூபா நேரடி முதலீட்டு வருமானமொன்று கிடைப்பது சென்மதி நிலுவை அட்டவணையொன்றில் எவ்வாறு பதியப்படும்

1. நிதிக் கணக்கு ஏனைய முதலீடு செலவு 100,நிதிக்கணக்கு பணமும் ஒதுக்கீடுகளும் வரவு 100
2. முதன்மை வருமானக் கணக்கில் செலவு 100,நாணயக் கணக்கில் ஏணைய முதலீடும் பணமும் வைப்பும் வரவு 100

3. நிதிக்கணக்கு நேரடி முதலீடு செலவு 100,நிதிக்கணக்கு பணமும் ஒதுக்குகளும் வரவு 100
4. நடைமுறை கணக்கு செலவு 100, மூலதன கணக்கு வரவு 100
5. சேவைக் கணக்கு வரவு 100, நிதிக்கணக்கு செலவு 100

40. சென்மதி நிலுவை எப்போதும் சமப்பட்டு அதன் பெறுமதி பூச்சியமாக அமைந்த போதிலும் சென்மதிநிலுவை பற்றாக்குறை எனக் கருதப்படுவது யாது?

1. முன்னைய வருடத்திற்கு சார்பாக குறிப்பிட்ட வருடத்தின் தேறிய அலுவல்கள் சார் ஒதுக்குகள் வீழ்ச்சியடைதல்
2. வர்த்தக மீதி பூச்சியமாதல் மூலம்
3. இரட்டைப்பதிவு தத்துவத்தின்படி கொடுக்கல் வாங்கல்கள் பதியப்படுவதனாலாகும்
4. நடைமுறை மற்றும் மூலதன கணக்கு மீதிகள் நிதிக்கணக்கு மீதிக்கு சமமாக அமைவதன் காரணத்தினாலாகும்.
5. குறிப்பிட்ட வருடத்தின் மத்திய வங்கியின் தேறிய அலுவல்சார் ஒதுக்குகள் அதிகரிப்பதனாலாகும்.

41. இலங்கையின் நாணய மாற்று விகிதம் 1 ரூபா = $^1/_{350}$ டொலராக காணப்படுகையில் உள்நாட்டுப்பணத்தின் வெளிநாட்டுப் பெறுமதி 20% ஆல் மதிப்பிறகம் செய்யப்படும் போது நாணய மாற்று விகிதம் ஒரு டொலருக்கு எத்தனை ரூபாவாகும்?

1. 1 டொலர் = 350ரூபா
2. 1 டொலர் = 0.002857 ரூபா
3. 1 டொலர் = 291 ரூபா
4. 1 டொலர் = 420 ரூபா
5. 1 டொலர் = 437 ரூபா

42. உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்யப்படும் ஒரு சோடி பாதணிகளின் விலை ரூபா 800.00 ஆகும் அதற்காக உள்நாட்டு உற்பத்தியாளன் ரூபா 300.00 பெறுமதியான இறக்குமதி மூலப்பொருட்களைப் பயன்படுத்துகிறான். அதற்கு சமனான இறக்குமதி செய்யப்பட்ட ஒருசோடி பாதணியின் விலையும் ரூபா 800.00 ஆகும் அரசு இறக்குமதி செய்யப்பட்ட பாதணிகளுக்கு 20% மும்,மூலப்பொருட்களுக்கு 10% மும் இறக்குமதி தீர்வையை அறவிடுமாயின் பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதம் யாது?


1. 10%  2. 20%  3. 26%  4. 30%  5. 32%


43. பொருளாதார அபிவிருத்தியை அடைந்து கொள்கின்ற போது நடைபெற வேண்டிய தர ரீதியான மாற்றமாவது.
1. விவசாயத்துறையின் சார்பளவு பங்களிப்பு அதிகரித்தல்
2. உற்பத்தி முறையும்,தொழில் நுட்பமும் உயர்வடைதல்
3. முதனிலைப் பொருட்களின் ஏற்றுமதி அதிகரித்தல்
4. இயற்கை வளங்களின் நுகர்வு வேகமடைதல்
5. நுகர்வோருக்கு வழங்கப்படும் மானியங்கள் அதிகரித்தல்

44. 2020ஆம் ஆண்டின் மானிட அபிவிருத்தி சுட்டெண்ணின் படி இலங்கைக்கு உரித்தாகும் நிலையும் அதன் பெறுமதியுமாவது

| | நிலை | சுட்டெண் பெறுமதி |
|---|---|---|
| 1. | 56 | 0.789 |
| 2. | 64 | 0.785 |
| 3. | 72 | 0.782 |
| 4. | 79 | 0.793 |
| 5. | 82 | 0.797 |

45. லோரனஸ் வளையீ ஒன்றின் வரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது






இதன்படி லோரன்ஸ் வளையீ கினிக்குணகம் மற்றும் வருமானப் பரம்பல் வேறுபாடு என்பவற்றிற்கிடையே தொடர்பு பற்றிய சரியான விடையாவது.

| | லோரன்ஸ் வளையீ | கினிக்குணகம் | வருமானப் பரம்பல் வேறுபாடு |
|---|---|---|---|
| 1. | சமவருமான கோட்டிலிருந்து விலகிச் செல்லும் போது | குறையும் | குறையும் |
| 2. | சமவருமானக் கோட்டை அண்மிக்கும் போது | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 3. | சமவருமான கோட்டில் அமையும் போது | பூச்சியமாகும் | ஆகக் கூடிய மட்டமாகும் |
| 4. | சமவருமான கோட்டில் அமையும் போது | பூச்சியமாகும் | ஆகக் குறைந்த மட்டமாகும் |
| 5. | OAB முக்கோணத்தின் மீது அமையும் போது | ஒன்றுக்கு சமனாகும் | ஆகக் குறைந்த மட்டமாகும் |

46. தனிநபர்கள் தொழில்களுக்கிடையே இடம்மாறிக் கொண்டிருக்கும் காலத்தினுள் ஏற்படும் தொழிலின்மை நிலமை அமைக்கப்படுவது

1. சுழற்சி முறை வேலையின்மை
2. பருவ கால வேலையின்மை
3. மறைமுக வேலையின்மை
4. உராய்வு லேயின்மை
5. அமைப்பு ரீதியான வேலையின்மை

47. நிலைபேறுடைய அபிவிருத்திக்கான இலக்காக அமையாதது.

1. வறுமையை ஒழித்தல்
2. சுத்தமான நீரும் சுகநலனும்
3. சிறந்த சுகாதார நிலையும் சமூக நலனும்
4. பட்டினி ஒழிப்பு
5. இயற்கை வாயுக்களின் பயன்பாடு

48. கருதுகோள் ரீதியான பொருளாதாரம் ஒன்றில் குறித்த வருடம் ஒன்றுக்குரிய சனத்தொகைத் தரவுகள் கீழே காட்டப்பட்டுள்ளன

| சனத்தொகை | வேலை செய்யக்கூடிய வயதிலான சனத்தொகை | வேலை வாய்ப்பில் உள்ள சனத்தொகை | வேலையின்மையிலுள்ள சனத்தொகை |
|---|---|---|---|
| 70மில்லியன் | 50 மில்லியன் | 15 மில்லியன் | 05 மில்லியன் |

இப்பொருளாதாரத்தில் உழைப்பாளர் படையின் பங்குபற்றல் வீதம் மற்றும் வேலையின்மை வீதம் என்பவற்றை முறையே காட்டும் விடையாவது.

1. உழைப்பாளர் படை பங்குபற்றல் வீதம் - 25% வேலையின்மை வீதம் 20%
2. உழைப்பாளர் படை பங்குபற்றல் வீதம் - 30% வேலையின்மை வீதம் 25%
3. உழைப்பாளர் படை பங்குபற்றல் வீதம் - 40% வேலையின்மை வீதம் 25%
4. உழைப்பாளர் படை பங்குபற்றல் வீதம் - 50% வேலையின்மை வீதம் 40%
5. உழைப்பாளர் படை பங்குபற்றல் வீதம் - 60% வேலையின்மை வீதம் 50%

49. சர்வதேச தரப்படுத்தல் அடிப்படையில் 2020ஆம் ஆண்டின் கீழே தரப்படும் சுட்டெடண்களின் இலங்கைக்கு உரித்தாக உள்ள இடத்தை சரியாக காட்டுவது

| | பூகோள ரீதியிலான போட்டித்தனமை சுட்டென் | கைத்தொழில்களை நடாத்திச் செல்வதற்கான வசதிச் சுட்டெண் | ஊழல் மோசடி சுட்டெண் |
|---|---|---|---|
| 1. | 68 | 108 | 95 |
| 2. | 84 | 99 | 94 |
| 3. | 85 | 111 | 91 |
| 4. | 87 | 104 | 89 |
| 5. | 84 | 100 | 93 |

50. 2022ஆம் ஆண்டில் இலங்கை சர்வதேச நாணய நிதியிடமிருந்து எந்த வசதி அடிப்படையில் கடன் பெறவுள்ளது.

1. துணை நில் கடன் வசதி
2. விரிவுபடுத்தப்பட்ட நிதி வசதி
3. தாங்கிக் கொள்ளும் வசதியும் நிலை பேறுத்தன்மை வசதியும்
4. விரிவுபடுத்தப்பட்ட கடன் வசதி
5. நெகிழ்வுள்ள கடன் வசதி

க. பொ.த உயர் தரம்

# பொருளியல் II

Channel NIE

கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சைக்கான முன்னோடி வினாப்பத்திரம்-2022

பொருளியல் பகுதி-11 நேரம்:- மூன்று மணித்தியாலங்கள்

அறிவுறுத்தல்

பரீட்சை சுட்டெண்:...................................

- எல்லா வினாக்களுக்குமான விடைகளை இத்தாளிலேயே வழங்குக.
- பகுதி (அ) விலிருந்து ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையும்,
- பகுதி (ஆ) விலிருந்து ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து
- எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி அ

01.i. பொருளியல் அடிப்படையில் இயற்கை வளங்களை எவ்வாறு வகைப்படுத்துவீர்? உதாரணத்தின் துணையுடன் விளக்குக (4 புள்ளிகள்)

ii.. அருமை தன்மையின் காரணமாக தெரிவும் தெரரிவின் காரணமாக அமயச் செலவும் தோன்றுகிறது உற்பத்தி சாத்திய வளையினை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றை உறுதிப்படுத்துக. (4 புள்ளிகள்)

iii மானிட மூலதனத்தை வரைவிலக்கணப்படுத்தி அதனை விருத்தியடையைச் செய்வதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iv. பொருளாதார அமைப்பு என்றால் என்ன பொருளாதார அமைப்பை வகைப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் நியமங்கள் எவை? (4 புள்ளிகள்)

v. குறித்த ஒரு பொருளாதாரமானது உற்பத்தி சாத்திய வளையியின் மீதுள்ள புள்ளியின் மீது செயல்படுவதாக கருதுக. பொருளாதாரமானது பொருளாதார வினைத்திறன் அடைந்துள்ளது என நீர் கருதுகிறீரா விளக்குக. (4 புள்ளிகள்)

02. I. கேள்வி விதியினை வரைவிலக்கணப்படுத்துக.கேள்வி சார்பின் அடிப்படையில் கேள்வி விதியில் நிலையாக காணப்படும் என்று எடுகோளாக கருதப்படுகின்ற ஏனைய காரணிகள் எவை? (4 புள்ளிகள்)

ii. நெகிழ்வற்ற நிரம்பலை வரைவிலக்கணப்படுத்திப பண்டமொன்றின் நிரம்பலானது நெகிழ்வற்றது என்பதை வரைபின் துணையுடன் விளக்குக. (4 புள்ளிகள்)

iii. அரிசி மற்றும் கணனி என்பவற்றிற்குரிய விலைக்கேள்வி நெகிழ்ச்சிக் குணகங்கள் கீழே தரப்பட்டுள்ளன

அரிசி – 0.25

கணனி – 2.25

உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தி வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் மேலே தரப்பட்ட பண்டங்களின் விலையினை அதிகரிப்பார்களாயின் அவர்களது நோக்கத்தினை அடைய முடியுமா என்பதை விளக்குக. (4 புள்ளிகள்)

iv. பின்வரும் அட்டவணை குறித்தவொரு பண்டத்திற்கான கேள்வி நிரம்பல் தொகைகளைக் காட்டுகின்றது

| விலை (ரூபா) | கேள்வித் தொகை (அலகுகள்) | நிரம்பல் தொகை(அலகுகள்) |
|---|---|---|
| 2 | 44 | -6 |
| 10 | 12 | 42 |

இத்தரவுகளின் அடிப்படையில் பின்வருவனவற்றை கணிப்பீடு செய்க.

அ). சமநிலை விலையும் தொகையும்

ஆ). சமநிலையில் கேள்வி நெகிழ்ச்சியும் நிரம்பல் நெகிழ்ச்சியும் (4 புள்ளிகள்)

v. உலகச் சந்தையில் எரிபொருள் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டதனால் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும் விலையைக் குறைத்தது. ஆனாலும் இலங்கை அரசாங்கமானது வாகன இறக்குமதிகள் மீது மேற்கொண்டுள்ள கட்டுப்பாடானது தொடர்ந்தும் அமுலில் காணப்படுகின்றது.இத்தகைய நிலையானது இலங்கையின் பெற்றோலிய சந்தையில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை கேள்வி நிரம்பல் வளையியின் துணையுடன் விளக்குக. (4 புள்ளிகள்)

3. i. அண்மைக்காலத்தில் இலங்கை அரசாங்கமானது முட்டைக்கான குறைந்த பட்ச விலையை நியமிக்க தீர்மானித்தது. இவ்வாறு முட்டைக்கு குறைந்தபட்ச விலையை விதிப்பதன் பொருளாதார விளைவுகள் எவை? (4 புள்ளிகள்)

ii.. கேள்வியை விட நிரம்பலானது நெகிழ்வுடையதாக காணப்படும் சந்தர்ப்பத்தில் வரிச்சுமையானது நுகர்வோனுக்கும் உற்பத்தியாளனுக்குமிடையே பகிரப்படும் முறையை வரைபின் துணைக்கொண்டு விளக்குக. (4 புள்ளிகள்)

iii. சந்தையொன்றில் விநியோகிக்கினற் நெல்லுக்கான கேள்விநிரம்பல் சமன்பாடுகள் கீழே தரப்படும்

$Qd=250-2p$

$Qs=-60+3p$

a).நெல்லுக்கான சந்தை சமநிலை விலையையும் சமநிலைத் தொகையையும் கணிப்பீடு செய்க. (2 புள்ளிகள்)

b). இலங்கையின் விவசாயத் துறையானது கடந்த சில மாதங்களாக பெரியதொரு பின்னடைவை எதிர்நோக்கியதை உணர்ந்த அரசாங்கமானது நெல் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக விலை ஆதரவு கொள்கையின் கீழ் ரூபா 80ஐ அமுல்படுத்தியது. இவ்விலை ஆதரவு கொள்கையின் கீழ் அரசாங்கமானது மிகை நிரம்பலை கொள்வனவு செய்யும் போதும், குறைநிரப்பு கொடுப்பனவை மேற்கொள்ளும் போதும் அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவுகளை கணிப்பீடு செய்க. (4 புள்ளிகள்)

உ).மிகை நிரம்பலை அரசாங்கமானது கொள்வனவு செய்யும் போது தோன்றும் சமூக நல நட்டத்தையும் (SWL)சமூக நலன இழப்பொன்று தோன்றுமாயின் இழந்த சமூக நலனையும் (DWL)கணிப்பீடு செய்க. (4 புள்ளிகள்)

iv. விவசாய பயிர்ச்செய்கைகளின் விலைகளை உறுதியாக பேணுவதற்காக அரசாங்கத்தின் பாதுகாப்பான இருப்புத்திரட்சியும், அவற்றை விடுவிப்பு செய்வதையும் மேற்கொள்ளும் முறையை வரைபின் துணைக் கொண்டு விளக்குக. (4 புள்ளிகள்)

04.i. உற்பத்தி சார்பை தெளிவுபடுத்தி குறுங்கால நீண்ட கால உற்பத்தி சார்புகளை குறியீட்டின் மூலம் காட்டுக. (4 புள்ளிகள்)

ii.. குறுங்கால உற்பத்தியில் உற்பத்தி கோடுகளுக்கும் செலவுக் கோடுகளுக்குமிடையிலான தொடர்பை வரைபடம் மூலம் தெளிவுபடுத்துக. (4 புள்ளிகள்)

iii உற்பத்தியில் அதிகரிக்கும் அளவுத்திட்ட விளைவும் அளவுத்திட்ட சிக்கனமும் தோன்றுவதற்கான காரணங்களை குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iv. நிறைபோட்டியிலும் தனியுரிமை போட்டியிலும் காணப்படும் ஒற்றுமைகளை குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

v. குறுங்காலத்தில் உற்பத்தி நிறுவனமொன்றின் எல்லைவருமாத்தை விட (MR) எல்லை செலவானது (MC) கீழுள்ள வெளியீட்டு மட்டத்திலிருந்து, உத்தம வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்வதற்கு செயல்படும் போது, இலாபத்தை உச்சபடுத்த மேற்கொள்ளும் செயற்பாட்டை வரைபின் துணையுடன் விளக்குக. (4 புள்ளிகள்)

05.i. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்தை அறிமுகப்படுத்தி, மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்தின் பிரதான பகுதிகளை பெயரிடுக. (4 புள்ளிகள்)

ii.. குறித்தவொரு பொருளாதாரத்தின் தேசிய கணக்கீடு தொடர்புடைய தகவல்கள் வருமாறு

(எல்லாத் தரவுகளும் பில்லியன் ரூபாவில்)

| | |
|---|---|
| ஏற்றுமதி | 300 |
| இறக்குமதி | 200 |
| தேறிய வெளிநாட்டு இரண்டாம் நிலை வருமானம் | 250 |
| தனியார் இறுதி நுகர்வுச் செலவு | 500 |
| தேறிய வெளிநாட்டு முதன்மை நிலை வருமானம் | 150 |
| கூட்டு அரச நுகர்வுச் செலவு | 400 |
| உள்நாட்டுச் சேமிப்பு | 800 |
| தனியார் அரச நுகர்வுச் செலவு | 350 |

பின்வருவனவற்றை கணிப்பீடு செய்க.

அ). மொத்த உள்நாட்டு செலவு

ஆ). மொத்த உள்நாட்டு உற்பத்தி

இ). செலவிடக்கூடிய மொத்த தேசிய வருமானம்

ஈ). தேசிய சேமிப்பு (1X4 புள்ளிகள்)

iii அரச தலையீட்டைக் கொண்ட பொருளாதாரமொன்றில் உட்பாய்ச்சல்,வெளிப்பாய்ச்சல் அடிப்படையில் பேரின பொருளாதார சமநிலை தீர்மானிக்கப்படும் முறையை வரைபின் துணைக்கொண்டு விளக்குக. (4 புள்ளிகள்)

iv. பின்வரும் எண்ணக்கருக்களுக்கு இடையிலான வேறுபாட்டை விளக்குக.

a. தன்னிச்சையான நுகர்வும்,தூண்டப்பட்ட நுகர்வும் (2 புள்ளிகள்)

b). எல்லை சேமிப்பு நாட்டமும் சராசரி சேமிப்பு நாட்டமும் (2 புள்ளிகள்)

v. பொருளாதாரமொன்றின் எல்லை நுகர்வு நாட்டமானது 0.8 ஆக காணப்படுவதுடன், அரச செலவையும் வரி அறவீட்டையும் ரூபா 100 மில்லியனால் உயர்த்தினால் பேரினப் பொருளாதார சமநிலை மீது ஏற்படுத்தும் தாக்கத்தை பெருக்கியின் துணையுடன் விளக்குக. (4 புள்ளிகள்)

06) i. இலங்கையில் ஒன்றிணைக்கப்பட்ட விரிந்த பண நிரம்பலை கணிப்பிடும் போது உள்ளடக்கப்படும் கூறுகளைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

ii. இலங்கையில் அண்மைக்கால பணநிரம்பலில் ஏற்பட்ட வேகமான அதிகரிப்பு காரணமாக உயர்வான பண வீக்க நிலைமையொன்றுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அத்தகைய பண வீக்க நிலையொன்றின் பொருளாதார விளைவுகளைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. பணத்திற்கான கேள்வியை தீர்மானிக்கும் காரணிகளைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iv. குறிப்பிட்டதொரு வர்த்தக வங்கி அமைப்பு ஒன்றினுள் செயற்படுகின்ற வர்த்தக வங்கியிடம் வைப்புத்தொகை 2000 பில்லியன் ரூபாவாக இருக்க சட்ட ரீதியான ஒதுக்கீடு 10% ஆகும். வங்கியினால் வழங்கப்பட்டுள்ள கடனின் அளவு 1500 மில்லியன் ரூபாவாகும்.

(அ) அத்தியாவசிய ஒதுக்குத்தொகை மற்றும் மிகை ஒதுக்குத்தொகை எவ்வளவு? (2 புள்ளிகள்)

(ஆ) மிகை ஒதுக்கீடுகள் முழுவதையும் கடனுக்கு பயன்படுத்தினால் வங்கி அமைப்பினால் வழங்கப்படக் கூடிய மொத்தக் கடன் தொகை எவ்வளவு? (2 புள்ளிகள்)

v. நிதி சந்தையை வரைவிலக்கணப்படுத்தி வகைப்படுத்திக் காட்டுக. (4 புள்ளிகள்)

07) i. அண்மைக் காலத்தில் உலகம் பூராக பரவிய கொவிட் 19 தொற்று நோய் நிலைமையிலிருந்து மீள்வதற்காக தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளும் படி உலக சுகாதார தாபனம் உலக மக்கள் அனைவரையும் அறிவுறுத்தியது இவ்வாறு தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வது எத்தகைய வெளிவாரி விளைவுத் தன்மையை வெளிக் காட்டுகின்றது? அதன் காரணமாக வளப் பங்கீட்டில் செயற்றிறனின்மையொன்று ஏற்படும் விதத்தினை வரிப்படம் ஒன்றின் மூலம் விளக்குக. (4 புள்ளிகள்)

ii. பொதுப் பண்டங்களையும், பொது வளங்களையும் விளக்குக. (4 புள்ளிகள்)

iii. சிறந்த வரியொன்றில் காணப்பட வேண்டிய இயல்புகள் நான்கைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iv. இலங்கை அரசதுறையின் செயற்றிறனை மேம்படுத்துவதற்காக அரசானது, அரச, தனியார் துறையின் பங்குடமை எண்ணக்கருவினை செயற்படுத்துகின்றது. இதனை உதாரணம் ஒன்றின் மூலம் விளக்கி, விளைவுகளையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

v. பொருளாதாரம் ஒன்றின் நடைமுறைச் செலவு உயர் மட்டத்தில் காணப்படுவதன் பொருளாதார விளைவுகள் யாவை? (4 புள்ளிகள்)

08) i. இரு நாடுகளுக்கு இருவகைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக ஏற்படும் செலவு விபரம் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. இரண்டு நாடுகளிலும் உழைப்பு 200 அலகுகள் வீதம் காணப்படுகின்றது என்பதையும் கவனத்தில் கொள்க.

| பண்டம் | இலங்கை | சீனா |
|---|---|---|
| தேயிலை (கி.கி) | 2 | 4 |
| அரிசி | 4 | 2 |

அ. ஒவ்வொரு நாட்டினதும் உற்பத்தி சாத்திய வளையிகளை வெவ்வேறாக வரைந்து சரியாக புள்ளிகளைக் குறிக்குக. (2 புள்ளிகள்)

ஆ. இலங்கை வர்த்தகத்தில் புகுவதாயின் இலங்கைக்கு நன்மை பயக்கின்ற சர்வதேச பரிமாற்று வீச்சை எழுதுக. (2 புள்ளிகள்)

ii. இலங்கை சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்குமீதி நீண்ட காலமாக பற்றாக்குறையாக இருப்பதற்கான காரணங்கள் யாவை? (4 புள்ளிகள்)

iii. சென்மதி நிலவைப் பற்றாக்குறையை இல்லாமல் செய்வதற்காக மிதக்கும் நாணயமாற்று வீதம் ஒரு தன்னியக்கப் பொறியாக செயற்படும் விதத்தினை பொருத்தமான வரிப்படம் ஒன்றின் உதவியுடன் விளக்குக. (4 புள்ளிகள்)

iv. கீழ் தரப்படும் கொடுக்கல் வாங்கல்கள் சென்மதி நிலுவை அட்டவணையொன்றில் இரட்டைப் பதிவு தத்துவத்தின்படி பதிவிடும் முறையை காட்டுக.

அ. வியாபாரி ஒருவர் வியாபார நடவடிக்கைக்காக 100 பில்லியன் ரூபாய் பெறுமதியான நாணயமல்லாத தங்கத்தை இறக்குமதி செய்தல்.

ஆ. மத்திய அதிவேக பாதை நிர்மாணிப்புக்காக ஜப்பான் கம்பனியொன்றுக்கு 150 பில்லியன் ரூபாய் செலுத்துதல்.

இ. இந்தியாவில் 6 மாதகால மருத்துவ பயிற்சிநெறியில் பங்குபற்றிய வைத்தியர் ஒருவர் 5000 இந்திய ரூபாவினை இலங்கைக்கு அனுப்புதல்.

ஈ. இலங்கை அரசாங்கத்துக்கு சர்வதேச நாணய நிதியித்திடம் இருந்து 400 பில்லியன் டொலர் கடனாக கிடைத்தது. (1 x 4 = 4 புள்ளிகள்)

v. இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்க செய்வதற்காக எடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகள் எவை? (4 புள்ளிகள்)

09) i. உயர் பொருளாதார வளச்சியொன்றை அடைந்துக்கொள்வதற்காக அரசாங்கமொன்றினால் பின்பற்றக் கூடிய நடவடிக்கைகள் எவை? (5 புள்ளிகள்)

ii. நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்திக் குறிக்கோள்கள் கவனத்தில் கொள்கின்ற பிரதான துறைகள் 5ஐக் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

iii. 2019ஆம் ஆண்டில் பெறப்பட்ட புள்ளிவிபர படி இலங்கையில் மானிட வறுமை சுட்டெண் பெறுமதி 14.3 ஆகும். எனினும் நகர் புறத்தில் வறுமையானது 6.0 ஆகும் அதேவேளை கிராமப் புறங்களில் வறுமை 15.0 ஆகும். இவ்வேறுப்பாட்டுக்கான காரணங்களை விளக்குக. (5 புள்ளிகள்)

iv. கீழுழைப்பு என்பதனை வரைவிலக்கணப்படுத்தி அதன் தன்மைகளை விளக்குக. (5 புள்ளிகள்)

10) i. இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகளின் தற்போதைய நிலைமை மிகவும் தாழ்மட்டத்தில் காணப்படுகின்றது இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பதற்கு நீர் முன்வைக்கும் முன்மொழிவுகள் எவை? (5 புள்ளிகள்)

ii. இன்றைய இலங்கையில் சுற்றுலாக் கைத்தொழில் எதிர்நோக்கும் சவால்கள் எவை? (5 புள்ளிகள்)

iii. கொவிட் 19 தொற்று காரணமாக பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதோடு வீட்டிலிருந்து கொண்டே வேலை செய்யும் நிலை உருவாகியது. இதன் பொருளாதார விளைவுகள் யாவை? (5 புள்ளிகள்)

iv. தாழ்ந்த மத்திய வருமானம் பெறும் நாடொன்று என்ற வகையில் உணவுப் பாதுகாப்புக்காக இலங்கையினால் பின்பற்ற கூடிய நடவடிக்கைகள் எவை? (5 புள்ளிகள்)